**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**
**CASE NO.SC. 238/2023**
**Deposition of P.W.8**

Name : மணி
S/o, D/o, W/o :
Village :
Taluk :
Calling :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:11.03.2026

**Accused Present.**

<u>முதல் விசாரணை</u>–

நான் குட்டக்குழியில் வசித்து வருகிறேன். குட்டக்கழி மருத்துவமனை அருகே டீ கடை வைத்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். சம்பவ இடத்திற்கு வந்ததாக அத்தாட்சிக்கு கையொப்பம் செய்ய சொன்னார்கள். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.3. போலீசார் என்னை விசாரித்தார்கள்

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதற்காக கையொப்பம் செய்து கொடுத்தேன் என்று எனக்குத் தெரியாது. வெள்ளை தாளில் கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். எழுதாத தாளில்தான் கையொப்பம் செய்தேன். வழக்கு பற்றியும் எந்த போலீஸ் என்றும் எனக்குத் தெரியாது. சொல்லி கொடுத்ததின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான்.

**CASE NO.SC. 238/2023**

**Deposition of P.W.9**

Name : பாலுபிள்ளை

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:11.03.2026

**Accused Present.**

<u>முதல் விசாரணை</u>–

நான் நான் குட்டக்குழியில் வசித்து வருகிறேன். குட்டக்கழி மருத்துவமனை அருகே பழக்கடை வைத்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். திருவட்டார் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அனுமதிக்க கோரி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>–**

திருவட்டார் காவல் ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு தயார் செய்த பார்வைமகஜரில் சாட்சியாக கையொப்பம் செய்து விட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால்சரியல்ல

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>–**

எதிரிகள் தரப்பில்  சாட்சியிடம் குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டது

Name : குமார்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:11.03.2026

**Accused Present.**

முதல் விசாரணை–

நான் தமிழ்நாடு சுகாதாரதுறையில் சுகாதார ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது புலிப்பனத்தில் வசித்து வருகிறேன். நான் குட்டக்குழி சுகாதார ஆய்வாளராக பணியாற்றிய போது 06.01.2023ம் தேதி திருவட்டார் காவல்நிலையத்தில் வைத்து அரசால் தடை செய்யப்பட்ட குட்கா மற்றும் புகையிலை ஆகியவற்றை பார்வையிட்டு அவற்றை விற்பனை செய்ய அனுமதியில்லை என்று சான்று வழங்கினேன். அந்த சான்று அ.சா.ஆ.4 (எதிரிகள் தரப்பில் அ.சா.ஆ.4ஐ ஆட்சேபனையுடன் குறியீடு செய்ய வேண்டுகோள் விடுக்கப்பட்டது, எனவே அ.சா.ஆ.4 எதிரிகள் தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

.2.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

நான் வழங்கிய சான்றின் நகல் எங்கள் அலுவலகத்தில் இல்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.4ல் அலுவலக முத்திரை எதுவும் இல்லை. அ.சா.ஆ.4ஐ வழங்க கேட்டு எனக்கு வேண்டுகோள் கடிதம் எதுவும்

கொடுக்கப்படவில்லை. விசாரணை அதிகாரி என்னை விசாரிக்கவும் இல்லை. அ.சா.ஆ.4 தொடர்பாக நான் பதிவேடு எதுவும் பராமரிக்கவில்லை. நான் எவ்வித ஆவணங்களும் வழங்கவில்லை என்றும், அ.சா.ஆ.4ஐ வழங்க எனக்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. போலீசார் கேட்டுக்கொண்டதற்கு ஏற்ப பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பார்வையிட்ட பொருள் உணவு பொருள் சம்மந்தப்பட்டதல்ல என்றால் சரிதான், அது புகையிலை ஆகும்.